## ஜனவரி - 1

**"ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து, அவரைத் துதிக்குஞ்சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள். அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல், நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்." - சங் 66: 8,9**

மற்றொரு வருஷம் முழுவதும் அவருடைய கிருபை நம்மை பாதுகாத்திருக்கிறதற்காக, "வழுவாதபடி நம்மைக் காத்ததற்காக" தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், நம்மில் அநேகர் இன்னமும் அவருடைய வார்த்தை சம்பந்தமாகவும் அதன் ஊழியம் சம்பந்தமாகவும் ஒரே இருதயமுடையவர்களாகவும் ஒரே மனதுடையவர்களாகவும் இருக்கிறோம். உண்மையாகவே, அவருடையவர்களல்லாத எல்லோரையும் கொழித்துப் பிரிக்க வேண்டுமென்ற (2தெச 2:10-12) ஒரே நோக்கத்திற்காகவே கர்த்தருடைய ஜனங்களிடத்திற்கு "கொடிய வஞ்சகத்தை" கொண்டுவர எதிராளி அனுமதிக்கப்பட வேண்டியவனாயிருக்கிறான் என்பதை நாம் ஞாபகப்படுத்தும் போது, வழுவாதபடி நம்மைக் காத்து எல்லா தெய்வீக ஏற்பாடுகளுடனும் நிறைவான சம்மதத்தில் மற்றொரு ஆண்டின் ஆரம்பத்தில் சத்தியத்தை உயர்வாக மதித்து, நாம் இன்னமும் உறுதியாய் நிற்கிறதற்காக நிச்சயமாகவே தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்த நம்மை ஏவ வேண்டும்.

**- Z '03, 3 (R 3125).**

தேவனுடைய உண்மையுள்ள ஜனங்கள் அவருடைய வார்த்தையை உயர்வாக பேசவும் அவருடைய குணங்களை திரட்டி வைத்திருக்கிற செய்தியைப் புரிந்துகொள்ளச் செய்யவும், ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துகிறார்கள். தேவன் தன்னுடைய உண்மையான ஜனங்களின் முழு ஓட்டத்திலும் அவர்களுடைய வாழ்க்கையைக் கெடாமல் பார்த்துக் கொள்ளுகிறார். அவர்கள் நிற்கிற உறுதியான பாறையான கிறிஸ்துவில் அவர்கள் கொண்டுள்ள தங்களுடைய நிலையிலிருந்து அவர்களை அவர் கீழே தள்ளப்படவோ அல்லது தங்களுடைய நிலையை இழந்து போகவோ அனுமதிக்கிறதில்லை. வருங்காலத்தில் அனுமதிக்கவும்மாட்டார். **-P '35, 182.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யோவே 2:26; சங் 103; 104:1; 105:1-7; 91:1-16; 92:1-5, 10-15; ரோம 8:31-39; 1பேது 1:2-9; யூதா 24,25; சங் 40:1-4; 115:18; 145:1,2; ஏசா 33:16; மத் 10:28-31**

**கோபுர வாசிப்பு : Z'14, 216 (R 5500).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் அவருடைய துதியை அறியச் செய்தேனா? அது எவ்வாறு என்னை ஊக்கப்படுத்தி நான் விழுந்து போகாமல் என்னைக் காப்பாற்றியது? இந்த வருஷத்தில் அவரை ஸ்தோத்தரிப்பதற்காக நான் என்ன செய்யப் போகிறேன்?**